**கொட்டகல பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொட்டகல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 03 நிர்மாண செயற்திட்டங்களுக்குரிய மூலதனச் செலவினம் மற்றும் நிர்மாணக் கடன்பட்டோர் ரூபா 1,812,473 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இல் இறுதிக் கணக்கில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்படும். |
| (ii) | மவுண்ட் வர்னன் வீட்டு வளாகத்தில் மணல் அகற்று வதற்கான கருத்திட்டத்தில் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 99,360 ஆக இருந்த போதும் ரூபா 199,773 என கணக்கீடு செய்யப்பட்டி ருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இல் இறுதிக் கணக்கில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்கப்படும். |

### 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) 218 விதி | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீதிவரி அறவீட்டுக்காக ஆதனங்களின் மதிப்பீடு 2008 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வீதி வரிக்காக ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் | தற்போது மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

### 1.4.1 வரித் தேவைப்பாட்டுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட ரூபா 10,045 ஆன முத்திரை கட்டண வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக் கவில்லை. | உரிய வரிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென | புதிய பிரதேச சபையொன்றாக இருப்பதால் இங்கு முத்திரைக் கட்டணங்கள் மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி பதிவு கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட ரூபா 24,699 ஆன முத்திரை கட்டண வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக் கவில்லை. | உரிய வரிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென | புதிய பிரதேச சபையொன்றாக இருப்பதால் இங்கு முத்திரைக் கட்டணங்கள் மற்றம் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி பதிவு கோரப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 566,329 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | |
|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,911,946 | 1,229,892 | 691,013 | 2,172,510 |
| வாடகை | 410,000 | 1,131,225 | 973,149 | 538,664 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,228,000 | 650,800 | 656,800 | - |
| ஏனைய வருமானம் | 889,961 | - | 181,073 | - |
| மொத்தம் | 6,439,907 | 3,011,917 | 2,502,035 | 2,711,174 |

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2.2.1.1 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) கடை வாடகை | | |
| 15 கடை உரிமையாளர் களிடமிருந்து ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடாமல் காணப்பட்ட ரூபா 186,194 ஆன நிலுவை மீதியில் 2019 மார்ச் 15 ஆந் திகதி வரை அறவிடப் பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | இதுவரை ரூபா 302,762 அறவிடப்பட்டுள்ளது. 02 கடைகள் முத்திரையிடப்பட்டுள்ளன. |

(ii) வீட்டு வாடகை

| | | |
|---|---|---|
| 05 நபர்களிடமிருந்து ரூபா 13,251 ஆன வீட்டு வாடகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடாமல் காணப்பட்டது. | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | புதிய வருமான காப்பாளர்களினால் உரிய பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வருகின்றன. |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) <u>நீதிமன்றத் தண்டப்பணம்</u>** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 649,124 நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 683,900 ஆன முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த சபை அறவிட்டுக் கொள்ள வேண்டும். | நீதிமன்றத் தண்ட அட்டவணை கிடைத்துள்ளதுடன் முத்திரைக் கட்டணங்களில் ரூபா 382,500 கிடைத்துள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் எந்தவொரு விடயங்கள் தொடர்பாக மாத்திரம் உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. | உப விதிகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் உப விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) **செயல்நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயலநடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.. | எதிர்வரும் ஆண்டில் செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தயாரிப்பட்டுள்ளது. |

(இ) **கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2015 மே 11 ஆந் திகதி ரூபா 83,373,432 செலவில் புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்துடன் 2016 திஅசம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 21,559,211 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிர்வாக மற்றம் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக அதன் வேலைகள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. | சிக்கல்கள் சீராக்கம் செய்யப்பட:டு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | மத்திய மாகாண பொறியியலாளர் திணைக்களத்தின் உத்தியொகத்தர்களினால் பரீட்சிக்கப்பட்டது. |

(அ) **சுற்றாடல் சிக்கல்கள்**

**கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நுவரெலியா மற்றும் ஆக்கரபத்தன பிரதேச சபைகளின் ஒதுக்கப்படும் கழிவுகள் சபையின் கொம்போஸ்ட் பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் பரிசோதனையின் போது சேரும் பொலித்தீன் எரிக்கப்பட்டு வந்தன. | முறையான கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் செய்யும் வேலைத்திட்டமொன்ற செயற்படுத்த வேண்டும். | தற்போது கழிவுப் பொருட்களை வேறுபடுத்தி வழங்கப்படுவதுடன் பிளாஸ்ரிக் போத்தல் நுவரெலியா மாநகர சபைக்கு |

| | | |
|---|---|---|
| | | வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக பிரதேச சபை போதியளவில் அறிந்திருக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) பதவி வெற்றிடங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட 14 பதவிகளில் 51வெற்றிடங்கள் காணப்பட்டன. | இயலுமானவரை விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை வேண்டும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

**(ஆ) ஊழியர் பிணை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2003 ஏப்ரல் 11 ஆம் திகதிய சீபீசீ/சீஎஸ்/ 06/06/ 02 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கை என்பவற்றிற்கு அமைய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை வைப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் மற்றம் ஏனைய சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய உத்தியோகத்தரிடம் இருந்து பிணை வைப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் | எதிர்காலத்தில் அது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

நீர்ச்சேவை வழங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நீர் வழங்கப்படும் மூன்று நீர்சேவைகளுக்குரிய கோடை காலங்களில் நீர் வழங்கல் மிகவும் பலவீனமான நிலைமை யொன்றினால் மிகவும் 2016 மார்ச் பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் முறைப்பாடுகள் கிடைத்தால் ஆண்டு பூராகவும் பட்டியலிடப்பட்டிருந்த போதும் கட்டண கொடுப்பனவினை நிராகரித்தமையால் 2018.12.31 இல் உள்ளவாறு ரூபா 550,716 ஆன நிலுவையொன்று காணப்பட்டது. | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் வருடம் பூராகவும் நீர்ச்சேவை வழங்கல் இடம்பெற வேண்டும். | இது தொடர்பாக வேல்ட் விஷன் நிறுவனம் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 193 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான வருமானம் செலவினங்களுக்கு இடையே இடம்பெறும் வேறுபாடுகள் தொடர்பாக விளக்கமளித்தல் கூற்றொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய விதிகளின் பிரகாரம் வேறுபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 திசெம்பர் சபை கூட்டங்களின் போது மாற்றப்பத்திரங்கள் மூலம் சரி செய்யப்படும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளக கணக்காய்வுப் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ள முடியமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் இவ்விடயத்திற்காக உத்தியோகத்தரொருவர் ஈடுபடுத்தப்பட வேண்டும்.. |